# எம்.ஜி.ஆர்.

அளிக்கும்



அன்னை பிலிம்ஸ்

# தாயின் மடியில்

கதை, வசனம்
சொர்ணம்

இசை
S.M.சுப்பையாநாயுடு

டைரக்ஷன்
A.சுப்பாராவ்

தயாரிப்பு
கே.ஆர்.பாலன்

அன்னை பிலிம்ஸ்

அளிக்கும்

# தாயின் மடியில்

| நடிகர்கள் : | நடிகைகள் : |
| --- | --- |
| மக்கள் திலகம் | அபிநய சரஸ்வதி |
| M. G. ராமச்சந்திரன் | B. சரோஜாதேவி |
| எம். என். நம்பியார் | பண்டரிபாய் |
| எம். ஆர். ராதா | மனோரமா |
| நாகேஷ் | கீதாஞ்சலி |
| டி. எஸ். முத்தையா | லட்சுமிபிரபா |
| திருப்பதிசாமி | |

மற்றும்

செந்தாமரை, வீரப்பன், S. A. G. சாமி,
M. A. ரஹ்மான், ஆழ்வார் குப்புசாமி, ஹரிகிருஷ்ணன்
பொன்னுசாமி, V. R. ராதா, N. S. மணியன்

| கதை வசனம் : | பாடல்கள் : |
| --- | --- |
| சொர்ணம் | கண்ணதாசன், வாலி |
| இசை : | ஒளிப்பதிவு : |
| S. M. சுப்பையா நாயுடு | R. R. சந்திரன் |

தயாரிப்பு :

K. R. பாலன்

டைரக்‌ஷன் :

A. சுப்பாராவ்

அன்னை பிலிம்ஸாரின்...

# தாயின் மடியில்

---

## பார்ப்பதற்கு முன் படிப்பதற்காக....

சொர்க்கம் எங்கே?... மனிதனின் கதையில் எழும்பிய முதல் கேள்வி இது... ஆனால், கிடைத்த விடைகள் ஏராளம்!

சொர்க்கத்தை குறுக்கு வழியிலே எட்டிவிட வேண்டும் என்ற குறுகிய எண்ணம் படைத்தவர்கள், பல வழிகளிலும் கொட்டியழித்த பொருளும் அதிகம்!

ஆனால், அந்தச் சொர்க்கம், ஏழை—பணக்காரன்; ஆஸ்திகன்—நாஸ்திகன்; கெட்டவன் – நல்லவன் என்ற பாகுபாடு இன்றி எல்லாருக்குமே மிக அருகில் இருக்கிறது.

ஆமாம்... சொர்க்கம் பெற்ற தாயின் காலடியில்தான் இருக்கிறது!

தாயை தெய்வமாக்குபவர்கள் – தாயன்பைப் பரிபூரணமாகப் பெறுபவர்கள் அந்தச் சொர்க்கத்தை எட்டி விடுகிறார்கள்!

**ஆனால்,... பாவம், ரக்கி ராஜா...?**

**அவனைச் சந்தித்திருக்கிறீர்களா?**

**அவனுக்கு எல்லாமே இருக்கிறது!**

**பணம் – தேவைக்குமேலே!**

**வெற்றி – அவன் அடிவைத்த இடமெல்லாம்!**

**வீரம் – அவன் ஒரே சோத்து!**

**அன்பு, பண்பு-இவற்றின் சிகரமே அவன்தான்!**

ஆனால், இவ்வளவு இருந்தும் அதோ... தனி இடத்தில்–இருட்டறையில் அவன் புலம்புகிறான்; தான் பெற்றவற்றை எல்லாம் உடைத்து நொறுக்கி வேதனையால் துடிக்கிறானே... ஏன் ?

அவன் அனாதை !... அனாதை !!

அவனுக்குத் தாய் இல்லையாம் !

அதனால்தான், "அம்மா! நீ எங்கே?" என்று அகண்ட வானத்தை நோக்கிக் கேட்கிறான்.

ஆமாம்... அவன் தாய்தான் எங்கே ?

அது ஒரு புதிர் நிரம்பிய மர்மக் கதை!... அவன் தாய் உலகத்தின் பார்வையிலே படாமல், எங்கோ மறைந்து வாழ்கிறாள் ! காரணம்... அவளது தூய வாழ்க்கையிலே கொடிய துரோகம் மண்டிக் கிடக்கிறது !

துரோகத்தை அழிக்க தாய் மகனைத் தேடுகிறாள் ! தாய்மையை உணர மகன் அன்னையைத் தேடுகிறான் !

இந்த இருமுனைப் போராட்டத்தில்தான் எத்தனை இடர்ப்பாடுகள் !

**காதலித்தவளைக் கொடிய எதிரியின் கையில் ஒப்படைக்கிறான் ராஜா !**

**காலொடிந்து தவிக்கிறான் !!**

**துப்பாக்கி முனையில் உயிரைப் பணயம் வைக்கிறான் !!!**

**கடைசியில், மலையுச்சியிலிருந்து வீழ்ந்து வாழ்வை முடித்துக் கொள்ளவும் தயாராகிறான் !!!!**

மனிதன் வாழ்க்கையில் சந்திக்கக்கூடாத எத்தனையோ துன்பங்களைச் சந்தித்து விடுகிறான் !

போகட்டும்... தாயைச் சந்தித்தானா?

அந்தத் தூய மகனின் லட்சியம் நிறைவேறிற்றா?
வெள்ளித்திரை விடையளிக்கும் !

## பாட்டு 1

இயற்றியவர் : **கண்ணதாசன்**
பாடியவர் : **பி. சுசீலா**

பெண்ணே ஒன்று சொல்லவா?
கண்ணே ஒன்று சொல்லவா ?
பால் போன்ற மனதினில் ஏக்கமா ?
பகலிலும் பொய்யான தூக்கமா? (பெண்ணே)

சுருண்ட கூந்தல் காற்றினில் ஆட
துள்ளும் கால்கள் சிறுநடை போட
மருண்டு நின்றாய் மானென விழித்தாய்
மஞ்சள் முகத்தை ஏனடி கவிழ்த்தாய் ? (பெண்ணே)

சின்ன இடையை கண்களில் அளப்பான்
சிவந்த இதழில் வண்டெனக் குதிப்பான்
என்று நினைத்து ஏங்குகின்றாயோ
ஏங்கி ஏங்கித் தூங்குகின்றாயோ (பெண்ணே)

---

## பாட்டு 2

இயற்றியவர் : **கண்ணதாசன்**
பாடியவர்கள் : **டி. எம். சௌந்திரராஜன், பி. சுசீலா**

பெண் : கள்ளிருக்கும் ரோஜாமலர் துள்ளுவதைப் பாரு
கள்ளிருக்கும் ரோஜாமலர் துள்ளுவதைப் பாரு
கன்னத்திலே இளமை மின்னுவதைப் பாரு

ஆண் : ஹோய்... ஹோய்... ஹோய்... ஹோய்

பெண் : கள்ளிருக்கும் ரோஜாமலர் துள்ளுவதைப் பாரு
கன்னத்திலே இளமை மின்னுவதைப் பாரு

ஆண் : கண்ணுக்குள்ளே பெண்ணழகு ஆடுவதைப் பாரு
கண்ணுக்குள்ளே பெண்ணழகு ஆடுவதைப் பாரு
உன்னிடமே நெஞ்சம் ஓடுவதைப் பாரு

பெண் : ஹோய்... ஹோய்... ஹோய்... ஹோய்

ஆண் : கண்ணுக்குள்ளே பெண்ணழகு ஆடுவதைப் பாரு
உன்னிடமே நெஞ்சம் ஓடுவதைப் பாரு

பெண் : ஹோய்... ஹோய்
வானத்திலே வெள்ளிநிலா
வானத்திலே வெள்ளிநிலா வட்டமிடும்போது
வஞ்சிமனம் பஞ்சணையில் பஞ்சுபடும்பாடு
காதலுக்கு வெட்கமில்லை கண்ணிருந்தும் தூக்கமில்லை
கட்டழகைப் பாரு பொட்டழகைப் பாரு

ஆண் : ஹோய்... ஹோய்... ஹோய்... ஹோய்

பெண் : கள்ளிருக்கும் ரோஜாமலர் துள்ளுவதைப் பாரு

ஆண் : ஹோய்... ஹோய்
நேற்றுவரை நானிருந்த நிலைமையெல்லாம் வேறு
பார்த்தவுடன் நீ கொடுத்த பருவமலர் நூறு
பால்வடியும் உனது முகம் பாடுபடும் எனது மனம்
பாடி வந்தாய் பாவை ஓடிவந்தேன் காளை

பெண் : ஹோய்... ஹோய்... ஹோய்... ஹோய்

ஆண் : கண்ணுக்குள்ளே பெண்ணழகு ஆடுவதைப் பாரு

பெண் : இன்று என்றும் நாளை என்றும் ஓடிச்செல்லும் காலம்

ஆண் : எந்நாளும் மாறாது காதல் என்னும் கோலம்
தென்றலுக்கு ஓய்வுமில்லை
சேர்ந்தவர்க்கு ஏக்கமில்லை

பெண் : ஹா ... ...

இருவரும்: ஒன்று படும்போது இன்பசுகம் கோடி

ஆண் : இன்ப சுகம் கோடி

பெண் : ஹோய்... ஹோய்... ஹோய்... ஹோய்
கள்ளிருக்கும் ரோஜாமலர் துள்ளுவதைப் பாரு

ஆண் : உன்னிடமே நெஞ்சம் ஓடுவதைப் பாரு

இருவரும்: ஹோய்... ஹோய்... ஹோய்... ஹோய்
கள்ளிருக்கும் ரோஜாமலர் துள்ளுவதைப் பாரு

## பாட்டு 3

இயற்றியவர் : **வாலி**

பாடியவர்கள் : **டி. எம். சௌந்திரராஜன், பி. சுசீலா**

பெண் : ராஜாத்தி காத்திருந்தா
ரோஜா போலே பூத்திருந்தா

ஆண் : ராஜாவும் ஓடி வந்தான்
ராகத்தோடே பாடி வந்தான்

பெண் : மான் கொடுத்த கண்களுக்கு
மை கொடுக்க வா
மயக்கத்தில் இருக்கையிலே
கை கொடுக்க வா மாமா

ஆண் : சின்னப்பெண் வாசலுக்கு
சீரெடுத்து வரலாமா ?
ஊரெல்லாம் போய் வரவே
தேரெடுத்து வரலாமா ?

பெண் : ஆடியிலே அரும்பானேன்
ஆவணியில் மலரானேன்
புரட்டாசி போனபின்னே
ஐப்பசியில் வா மாமா

ஆண் : நீ முடிச்ச கூந்தலுக்கு
பூ முடிக்க வருவேனே
நாள் பார்த்து நலம் பார்த்து
கை பிடிக்க வருவேனே

காலங்கள் மாறிப்போகும்
காதல் மட்டும் மாறுவதில்லை

## பாட்டு 4

இயற்றியவர் :
**வாலி**

பாடியவர் :
**டி. எம். சௌந்திரராஜன்**

எத்தனை செல்வங்கள் வந்தாலுமே
எத்தனை இன்பங்கள் தந்தாலுமே
அத்தனையும் ஒரு தாயாகுமா
அம்மா... அம்மா... அம்மா... எனக்கது நீயாகுமா ?

தாயின் மடியில் தலை வைத்திருந்தால்
துயரம் தெரிவதில்லை
தாயின் வடிவில் தெய்வத்தைக் கண்டால்
வேறொரு தெய்வமில்லை

பத்து மாதம் பொறுமை வளர்த்தே
பூமியை மிஞ்சிடுவாள்
வெள்ளை மனதைத் தொட்டிலாக்கி
பிள்ளையைக் கொஞ்சிடுவாள்

அன்பில் மலரும் அற்புதமெல்லாம்
அன்னையின் விளையாட்டு
அலையும் மனதை அமைதியில் வைப்பது
அன்னையின் தாலாட்டு

என்னைப் பார்த்த அன்னை முகத்தை
ஏழை பார்த்ததில்லை
கண்ணே கண்ணே கண்ணே என்று
கொஞ்சிய வார்த்தை காதில் கேட்டதில்லை
காதில் கேட்டதில்லை காதில் கேட்டதில்லை

## பாட்டு 5

இயற்றியவர் : வாலி

பாடியவர்கள் : டி. எம். சௌந்திரராஜன், பி. சுசீல

ஆண் : என்னைப்பார்த்து
எதைப் பார்த்தாலும்
எதுவும் நானாகும்

பெண் : உன்னைப் பார்த்து
எதைப் பார்த்தாலும்
எதுவும் தேனாகும்

ஆண் : ஓவியப் பாவை
பூவிதழ் தேவை
காலமெல்லாம் நான் வரலாமா ?

பெண் : காதல் தலைவன் கைகளிலே என்
கட்டழகை நான் தரலாமா ?

ஆண் : மைவிழி சிட்டு
மல்லிகை மொட்டு
கையருகே கொஞ்சம் வரவேண்டும்

பெண் : கண்கள் பட்டு
கைகள் தொட்டு
கன்னியின் மனதைப் பெறவேண்டும்

ஆண் : செக்கச் சிவந்த கன்னமிரண்டு
சர்க்கரையோ இல்லை கற்கண்டோ

பெண் : பருவம் வந்ததும்
பக்கம் வந்தவர்
பாவலனோ இல்லை காவலனோ

## பாட்டு 6

பாடியவர் :
பி. சுசீலா

பார்வையிலே பந்தல் கட்டி
பருவ நெஞ்சிலே மேளம் கொட்டி
பாவை வந்தேன் பாவை வந்தேன்
பார்க்கவில்லையே

கண்ணோடு கண்ணை வைத்தேன்
கண்ணருகே என்னை வைத்தேன்
இன்னொருத்தி உன்னருகே
பழக வந்தாளே (பார்வையிலே)

கொய்யாத பூவைக்கொய்து
கொத்தோடு கனியச்செய்து
கைகளிலே தேனெடுத்து
பருகவில்லையே (பார்வையிலே)

பூவெடுத்தேன் தலை முடித்தேன்
பொன் முகத்தில் பொட்டும் வைத்தேன்
என் மனதை உன் மனதில்
சேர்க்கவில்லையே

பார்வையிலே பந்தல் கட்டி
பருவ நெஞ்சிலே மேளம் கொட்டி
பாவை வந்தேன் பாவை வந்தேன்
பார்க்கவில்லையே

---

ஹரிஹர அச்சகம், வேலூர்—போன் : 356